உ

பரமசிவஸ் தோத்திரம்.

சுப்பிரமணியக்கடவுள்

அவனுசிப்பத்து.

T. சாரதா புத்தகசாலை அதிபர்

T. S. துரைசாமி முதலியார்

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

முராரி அச்சுக்கூடம், சென்னை.

10

உ

கடவுள் துணை.

பரமசிவஸ் தோத்திரம்,

காயாமரத்தின் கனியாகி கனியிற்கொட்டை யுள்
ளாகித், தாயாயிரேழுலகுக்குந் தந்தையுமான தயாபர
னே, யாயாமறை நூல் தனைவகுத்தவரனே புந்த னடைக்
கலங்காண், பேயா பெங்கள்பெருமானே பித்தா பெனை
யாளாயோ. 1

அரவப்பணியா யணிவோனே வரனேயடியார்க்கெ
ளியோனே, மருவின்கொழுந்தின் வாசனைபோல் மாயா
மருளா மகதேவா, குருவைச்சிஷன் தனைத்தேடி குடி
கொண்டுளத்திலிருப்போனே, லிரவும்பகலு முனைப்புக
ழ்வேன் யீசாயெனையாளாயோ. 2

மட்டார்குழலிதனைக்கூடி மாயாவயற்றுக் கிரை
தேடிபட்டாங்கடித்துப் பரஞ்சோதி பாதங்காணவேணு
மென்றே, கட்டாச்சுரபி கன்றதுபோல் காசினியெங்கு
குந் திரிந்தடியேன், வெட்டாக்கொம்பையெட்டிநின்றே
ன் ஈசாபெனையாளாயோ. 3

வனக்குன்றெடுத்து வளர்த்தபெண்ணை வைத்தா
யுந்தனிடப்பாசம், சினக்கும் புலித்தோல்தரித்தோனே
சிவனே யெங்கள் பெருமானே, நினைக்கும்பொழுது அ
டியேன்முன் னிமலாவந்து நில்லாயோ, எனக்குமுனக்
கும்போகா தீசாபெனையாளாயோ. 4

கொல்லுங்களிறை புரித்தோனே குடிகொண்டுளத் திலிருப்போனே, செல்லுந்தளத்தி லிருந்தென்ன சிவ னே யடியேன்படமாட்டேன், அல்லும்பகலும் உனைத் தொழுவேனையா உந்தனடைக்கலங்காண், இல்லும்பிற ப்புமினிவேண்டே னீசாவெனையாளாயோ. 5

வருவதும்போவது மினிவேண்டேன்வாழ்வும்வே ண்டேன் புவிவேண்டேன், தருவதெனக்கு உன்பாதஞ் சர்வஜீவதயாபரனே, குருவுபதேசம் நீதந்துகுடிகொண் டுளத்தி லிருந்தடியே, னிருவினையறுத்தே யெனையாண் டவரனே யெளியேன்முன் வாராயோ. 6

நில்லாவாழ்வைச் சதமென்று நெறியா னடக்கமா ட்டாமல், நல்லார்பொல்லா ரென்றறியாமல் நமன்போல் நடுங்கித்திரிந்தாலும், அல்லார் குழலாளுமைபாகா வா னே யடியார்க்கெளியோனே, எல்லாம் பொறுக்கப்பாமு னக்கே யீசாவெனையாளாயோ. 7

பொங்குகடல்சூழுலகமெங்கும் புவியிலேழு புவ னமெல்லா, மெங்குமுந்தனொளியன்றோ யிறைவாவெ ங்கள்பெருமானே, அங்கந்தளர்ந்து மிகமெலிந்துவடி யேன்வயற்றுக் கிரைம்தடி, யெங்குந்திரிந்துவுழலாம லீசாவெனையாளாயோ. 8.

பொய்புமெய்யுந்தானுரைத்துப் புவிமேல்வாழ்வை ச்சதமென்று, கையைஞ்சலித்துக் கால்சலித்துக் காத்தா வுன்றன் செயலன்றோ, செய்புந்தொழிலையு மெய்யென்

று சிவனேயடியேன் படுவானேன் மெய்யுஞ்சிலையுந்தனை
யெறிந்த வீசாயெனையாளாயோ. 9

நெருப்போவுந்தன் திருமேனிநீறோ பூசித் திரிவத
ல்லால், பொருப்போயுந்த னிருப்பிடந்தான்புவியீரேழு
புவனமன்றோ, தருப்போல்கிளைத்துத் தழைத்து நின்
றாய் சகலசீவஜெந்துக்குள்ளே, இருப்பாயெந்த னுளந்
தனிலே யீசாயெனையாளாயோ. 10

மங்குமனிதரெலும்பையெல்லா மார்மேல் நிறைய
ப்பூண்டுகொண்டு, அங்கம்வளர்க்கப்படும்பாடு யாந்தா
னறிடப்போறார்கள் சங்குசக்கரத்தில் மழுமானுந் தரித்
தசூலம் பிடித்தெதிரே, யெங்குந்திரிந்து வுழலாமலீசா
யெனையாளாயோ. 11

கல்லாதவனா யிருந்தாலுங் கனத்தபாவஞ் செய்தா
லும், பொல்லாதவனா யிருந்தாலும் புலையுங் கொலையுஞ்
செய்தாலுஞ், சொல்லாவாசல் தனைச்சென்று சிவனேயு
ன்னை மறந்தாலும், எல்லாம் பொருக்கக் கடனுனக்கே
யீசாயெனையாளாயோ. 12

படுவேன்பாடு படச்சொன்னால் பாரஞ்சுமக்கப்பர
முனக்கே, விடுவேனுனை விடச்சொன்னால் விதியின் பய
ன்தன் பயனன்றோ, சுடுவேன் பாவந்தனையின்று சுட
ரேயுந்தனொளியாலே, விடுவேன்வழக்குநானுன்னை யீசா
யெனையாளாயோ. 13

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அவனுசிப்பத்து.

வற்றாதபொய்கை வளநாடுகண்டு மலைமேலிருந்த மரா, வுற்றாரெனக்கு வொருபேருமில்லை வுமையாள்தன க்குமகனே, முத்தாடைதந்து வடியேனையாளு முருகேச ரென்தன்மனத்தே, வித்தாரமாக மயில்மீதிலேறி வரவே ணுமென்றனருகே. 1

ஆலாலமுண்டோன் மகனாகிவந்து னடியார்தமக்கு முதல்வி, பாலூரனுண்டு கனிவாய்திறந்து பயனஞ்செ முத்தைமறவேன், மாலானவள்ளி தனைநாடிவந்து வடி வாகிநின்ற குமரா, மேலானவெற்றி மயில்மீதிலேறிவர வணுமென்றனருகே. 2

திருவாசல்தோறு மருள்வேதமோத சிவனஞ்செழு த்தை மறவேன், முருகேசரென்று மடியார்தமக்கு முத லாகிநின்றகுமரா, குருநாதசுவாமி குறமாது நாதர்கும ரேச ரென்றபொருளே, மறவாமல்வெற்றிமயில் மீதி லேறி வரவேணுமென்றனருகே. 3

உதிரந்திரண்டு பனியூரலுண்டுருவாசல்தேடிவரு முன், கதிபோலெழுந்த திருமேனிநாதர் கடைவிடுதத்து மருள்வாய், முதிரஞ்சிறந்தவயல்விறு செங்கைவடிவே லெடுத்தகுமரா, யதிராய்நடந்து. மயில்மீதிலேறி வர வேணுமென்றனருகே.

மண்ணுடமீசன் மகனுரையுந்தன்மலைவிடுதெந்துமரு
ள்வாய், வண்டேரல்பாயும் வயலூரில்செங்கை வடிவேலெ
டுத்தகுமரா, நன்றுகவந்து வடியேனையாண்டு நலவீடுதந்
துமருள்வாய், கொண்டாடிவெற்றி மயில்மீதிலேறி வர
வேண்டு மென்தனருகே. 5

நீலஞ்சிறந்த குறமாதுவள்ளி நின்பாதம் வைத்த
குமரா, சாலனெழுந்து வெகுபூசைசெய்து கயருமெடுத்
துவருமுன், வேலும்பிடித்து வடிடார்தமக்கு வீராதிவீ
ரருடனே, சாலப்படரிந்து மயில்மீதிலேறி வரவேண்டு
மென்றனருகே. 6

தலைகட்டநூலின் நிழல்போலநின்று தடிமாறிகொ
ந்து அடியேன். நிலைகெட்டுபோனும் புவிமீதில்நின்று நெ
டுமூச்செறியவிதியோ, மலைதொட்ட செங்கை வடிவேற்
கடம்பா வடியேனையாளுமுருகா மலையேறிமேயுமயில்மீ
திலேறி வரவேணுமென்றனருகே. 7

வண்டுண்டுபூவில் மதுவூறல்பாம்புவயலூரில்செங்
கைவடிவேல், கண்டொன்றுசொல்லி திரிவார்கள் வாசல்
கடனென்றுகேட்கவிதியோ, வண்டுறுபூவிலிகழ் மேவு
வள்ளி தெய்வானைக் குகந்தவேலா, நன்றென்று சொ
ல்லி மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. 8

விடதூதரோடி வரும்போதுவும்மை வெகுவாக
நம்பினேனே, குறமாதுவள்ளி பீடமாகவைத்துமயிலே
றிவந்தசெல்வா, திடமாகசோலை மயில்மீதில் வாழும்

திருமால்தமக்குமருகா, வட்மானிபழனி வடிவேலுநா
தா வாவேணுமென்றனருகே. 9

ஓங்காரசத்தி யுமைபால்குடித்து வுபதேச மூறை
த்தபரனே, பூங்காவனத்திலிதழ்மேவும்வள்ளி புஜமீதி
ருந்தகுகனே, யாங்காரசூரர் படைவீடுசோர வடிவேல்
விடுத்தபூபா, பாங்கானவெற்றி மயில்மீதிலேறி வாவே
ணுமென்றனருகே. 10

ஆறுறுமாறு வயதானபோதுவடியேன் நினைந்தபடி
யால், வேறேதுசிந்தை நினையாமலுந்தனுசாரசங்க மரு
ள்வாய், அசுரேசர்போல யெமதூதரென்னை தொட்
டோட கட்டவருமுன், மாறுதுதோகை மயில்மீதிலே
றிவரவேணுமென்றனருகே. 11

கையாரவுன்னைதொழுதேத்தமனது கபடேது சற்
றுமறியேன், ஐயாவுனக்காளாகும்போது, வடியார்தமக்
குமெளியேன், பொய்யானகாயமறிவேயொடுங்க யுயிர்
கொண்டுபோகவருமுன், வையாளியாக மயில்மீதிலேறி
வரவேணுமென்றனருகே, 12

ஏதேதுஜன்மம் மெடுத்தனோமுந்தி யிந்தப் பிறப்
பிலறியேன், மாதாவுந் தந்தைநீ மாதவன் தனக்குமரு
காகுறத்திகணவா, காதோடுகண்ணை யிருளாகமூடி யுயிர்
கொண்டுபோகவருமுன், வாதாடிநின்றுமயில்மீதிலேறி
வாவேணுமென்றனருகே. 13

வேறு.

வருமோகமக்குமொரு வாராதவாபத்துவஞ்சனைச்
சூனியங்கள் வைப்புதுணமேவலும்வவத்திடபென்மே

லொரு வஞ்சகநினைந்தபோதும் கருவேரறுத்தவனைக் கண்டித்துத் தெண்டிக்க கர்த்தனேயுனைநம்பினேன் காலனும் பாசம்விட்டோலமிட்டோடவே கதிர்வேலெடுத்துவந்து, அன்புடனடியன்மேலனுவளவு வாராம லாதரித்தெனையாளுவாய், ஆலவிஷமுண்டனிடபாலனே யசுரர்குலவேரோடறுத்தகுமரா, சருதிமுதல்வேதமும்சற்றுமெய்ஞ்ஞானங்களும் தேடுதற் கரிதானதெனபழனிமலையில்வாழும், தேவாதிதேவனே யாவர்க்குமேலான தெண்டாயுதக்கடவுளே. 14

அத்திமுகனுக்கிளைய சுத்தனே நித்தனே யானைமீதேறுபானே, ஐயனேமெய்யனேயுய்யவழி யறிகிலேன் அரகரா முருகவேளே, சத்திசிவ பாலாவருள் கண்முகத்தேவனே சரவணபவானந்தனே, சாலோக முதலறிய பதவித செல்வமே தண்சஞ்ச மலர்தாளனே, நித்தியகல்யாணகுண முத்தர்பணியையனே நிலையற்ற பாவியதிலும், நிர்மூடனுகையாற்செய்குறைகணீக்கியே நீரென்னையாளவேண்டுஞ், சித்திபுரிவல்ல திருமாலின் விழிமருகனேதேவர்க்குமிக வறியோனே, தெங்குமொழிலெங்குபலி சென்னைநகர் தங்குமருள் சிங்காரவடிவேலனே. 15

ஆகபாடல்-28.

முற்றிற்று.